**தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2015**

---

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதியப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும். கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 ஆம் ஆண்டிற்குரித்தாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 167,166 தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் உரிய ஆண்டின் போது அட்டுறுவாக்கப்படாதன் காரணமாக நடப்பாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டுக் கணக்கினதும் முதலீட்டு வட்டிக் கணக்கின் மீதிகள் அத்திகதியில் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 35,510 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடப்பாண்டு முடிவடைந்ததன் பின்னர் முடியுமான வரை நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று அமைச்சு செயலாளரால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், இப்பிரிவின் பிரகாரம் நிர்வாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 39,213,989 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 15,061,490 மிகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 24,152,499 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அரசின் மானியங்கள் ரூபா 15,000,000 ஆல் அதிகரித்தமை மற்றும் மொத்த செலவினம் ரூபா 13,419,508 ஆல் வீழ்ச்சியடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டு அமைச்சரால் நியமிக்கப்பட்ட கடந்த 05 ஆண்டுகளுக்குரிய மோசடிகள், முறைகேடுகளை ஆராயும் குழுவொன்றும் இலங்கை கிரிக்கட் நிறுவகத்தின் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக ஆராயும் குழுவிற்கும் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மூலம் ரூபா 2,270,000 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய குழு அறிக்கை மூலம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையை செயற்படுத்துவதற்கு நிதியத்தின் மூலம் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது விளையாட்டு அமைச்சின் பராமரிப்பிற்கு பொறுப்பான பொறியியலாளருக்கும் விளையாட்டு அமைச்சின் வரவேற்பு உத்தியோகத்தருக்கும் முறையே ரூபா 258,000 தொகையும் ரூபா 128,284 தொகையும் விளையாட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இச்செலவினம் விளையாட்டு நிதியத்தை பேணிச்செல்லும் செலவினம் ஒன்றாக இல்லாதிருந்ததுடன் அமைச்சின் நிர்வாகச் செலவினமாக இருந்தது. இக்கொடுப்பனவு விளையாட்டுக்கள் நிதியத்திற்கு முரணாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் 2 ஆவது பிரிவிற்குரிய இலங்கையின் விளையாட்டுகளுக்கு உற்சாகமளித்து தைரியமூட்டுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய இலக்கிடப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் நடவடிக்கைகளின் கணக்காய்வு செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், விளையாட்டுத்துறை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் நிதியத்தின் நடவடிக்கைகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலவினம் தொடர்பாக போதியளவு உள்ளக பரிசோதனையொன்று இடம்பெறவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினங்களையும் உள்ளவாறான செலவினங்களையும் ஒப்பிடும் போது 20 செலவின விடயங்களுக்கிடையே 17 உருப்படிகளில் 34 முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 5.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது விளையாட்டு அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளவாறான செலவினங்களுக்கும் இடையே முரண்கள் காணப்பட்டமை. |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை. |